**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.194/2023**

**தேதி : 12.06.2025**

**(வா.சா.1) – திரு. தங்கவேல்**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)**

1. நான் குத்தகைக்கு நிலம் பெற்று விவசாயம் செய்து வருகிறேன். நான் கோதைமங்கலம் கிராமம், கணபதி நகரில் கவுண்சிலராக இருக்கிறேனா என்றால் இப்போது இல்லை, வழக்கு தாக்கல் செய்யும்போது கவுண்சிலராக இருந்தேன். தாவா கடனுறுதிச் சீட்டு 10.10.2021 அன்று என் வீட்டில் வைத்து பிரதிவாதி பணம் வாங்கினார். கடனறுதிச் சீட்டை பிரதிவாதியே வாங்கி வந்தார். பெரியசாமி மற்றும் அசோக்குமார் உடனிருந்தார்கள். பிரதிவாதி அவசர நிமித்தம் குடும்பச் செலவு மற்றும் இதர செலவிற்காகவும் கடன் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்து என்றால் அவர் வைத்தியச் செலவிற்காகவும், குடும்பச் செலவிற்காகவும் கடன் வாங்கினார்.

2. தாவாக் கடனுறுதிச் சீட்டில் உள்ள கையொப்பம் பிரதிவாதியுடையது அல்ல என எதிர்வாத உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பிரதிவாதியின் கையொப்பம்தான். பிரதிவாதியின் கையொப்பத்தை நிரூபிக்க நான் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதி கடனுறுதிச் சீட்டில் உள்ள கையொப்பம் அவருடையது அல்ல என நிரூபிக்க நடவடிக்கை எடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் பைனான்ஸ் தொழில் செய்து வந்தேன் என்றும், அப்போது கவுணிசிலராக இருந்த என்னிடம் பிரதிவாதி ரூ.20,000/– கடன் பெற்று தினசரி ரூ.200/– என திருப்பிச்செலுத்தி வந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் பைனான்ஸ் தொழில் செய்யவில்லை. கூடுதல் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்ட நோட்டு என்னுடையது அல்ல.

3. தாவா கடனுறுதிச் சீட்டை ஒரே பேனாவால் எழுதினேனா என்று கேட்டால் நான் எழுதவில்லை, பிரதிவாதி அழைத்து வந்தவர்தான் எழுதினார். அவர் பெயர்

அசோக்குமார். சாட்சி கையொப்பம் செய்தவர் பெரியசாமி. கடனுறுதிச் சீட்டில் ஒரு சாட்சிக் கையொப்பம் உள்ளதா, இரண்டு சாட்சிக்கையொப்பங்கள் உள்ளதா என்று கேட்டால் அசோக்குமார் எழுதியதும், சாட்சியுமாக கையொப்பம் செய்துள்ளார். பெரியசாமி சாட்சியாக கையொப்பம் செய்தார். பிரதிவாதி எத்தனை கையொப்பம் போட்டார் என்றால் இரண்டு கையொப்பங்கள் போட்டார். வழக்கறிஞர் அறிவிப்பு எப்போது அனுப்பினேன் என்றால் 15.11.2022 ல் அனுப்பினேன். அதை பிரதிவாதி 16.11.2022 அன்று வாங்கினார்.

4. பிரதிவாதி எவ்வித கடனுறுதிச் சீட்டின் பேரிலும் கடன் பெறவில்லை என்றும், அவர் ரூ.20,000/-ம்தான் கடன் வாங்கினார் என்றும், பிரதிவாதி கடனுறுதிச் சீட்டு எதிலும் கையொப்பம் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல, பிரதிவாதி ரூ.95,000/- கடன் வாங்கினார். தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u> இல்லை.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.06.12 17:15:36 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.